1 8 செப் 2006
தமிழ் வளர்ச்சி வளாகம்

- 111006

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

தமிழ் வளர்ச்சி – நூல்கள் நாட்டுடைமை – 2006–2007–ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், அறிவித்த அறிவிப்பின்படி திரு சூரிய நாராயண சாஸ்திரி (பரிதிமாற் கலைஞர்) அவர்களின் 13 நூல்களை நாட்டுடைமையாக்கி அவரது மரபுரிமையர்களுக்கு பரிவுத் தொகையாக ரூ. 15 இலட்சம் வழங்கி – அரசு ஆணை வெளியிடப்படுகிறது.

---

தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலைய(தவ1.1)த்துறை

அரசாணை(நிலை) எண். 269

நாள் 13.09.2006.
(திருவள்ளுவராண்டு 2037
விய – ஆவணி 28)

படிக்க:

தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடிதம் ந.க.எண்.12115.தமிழ்1.2005,
நாள் 29.12.05 மற்றும் 8.8.2006.

---

ஆணை :

2006–2007–ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இத்துறை சம்பந்தமாக அறிவித்த அறிவிப்புகளில் தமிழைச் செம்மொழி என்று அறிவிக்க வேண்டுமென முதல் குரல் கொடுத்தவரும், நூற்றாண்டுகளுக்கு முன்பே சூரிய நாராயண சாஸ்திரி என்ற தனது பெயரை " பரிதிமாற் கலைஞர் " என்று தூய தமிழ்ப் பெயராக மாற்றிக் கொண்டவரும், திருப்பரங்குன்றத்தில் பிறந்து இந்தத் திருவிடம் முழுவதும் புகழ் செதுக்கியவருமான பெருமகனாரது நினைவைப் போற்றும் வகையில் பரிதிமாற் கலைஞரின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவரது வழித் தோன்றல்களுக்கு உரிய பரிவுத் தொகை வழங்கப்படும் என அறிவித்திருந்தார்கள்.

2. மேற்கண்ட அறிவிப்பினை செயற்படுத்தும் முகமாக மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் திரு.பரிதிமாற் கலைஞரின் 13 நூல்களையும் நாட்டுடைமையாக்கி ரூ. 10 இலட்சம் (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) அவர்களது 18 மரபுரிமையர்களுக்கு வழங்கப்படலாம் என தமிழ் வளர்ச்சி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

3. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கருத்துருவை அரசு ஆய்வு செய்து திரு.பரிதிமாற் கலைஞரின் வழித் தோன்றல்களுக்கு பத்து இலட்சம் என்பது போதாத தொகையாக இருக்கும் என்பதை கருத்தில் கொண்டு பரிதிமாற் கலைஞர் அவர்களின் கீழ்க்கண்ட 13 நூல்களையும் நாட்டுடைமையாக்கி பரிவுத் தொகையாக அவரது தற்போதைய 19 மரபுரிமையினர்களுக்கு வழங்கிட ரூ. 15,00,000/– ( ரூபாய் பதினைந்து இலட்சம் மட்டும்) ஒப்பளிப்பு செய்து ஆணையிடுகிறது..

1. கலாவதி
2. ரூபாவதி
3. மானவிஜயம்
4. மதிவாணன்
5. நாடகவியல்
6. தமிழ் வியாசங்கள்
7. தமிழ் மொழியின் வரலாறு
8. பாவலர் விருந்து
9. தமிழ்ப் புலவர் சரித்திரம்
10. தனிப்பாசுரத் தொகை
11. ஸ்ரீமணியு சிவனார் சரித்திரம்
12. சித்திரக் கவி விளக்கம்
13. மாலா பஞ்சகம்

மற்றும் இவர் எழுதிய பிற நூல்கள் (இருப்பின்) அனைத்தும்.

4. மேலே பத்தி 3–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை, கீழ்க்காணும் தலைப்பில் பற்று வைக்கப்படும்:–

> " 2202 – பொதுக்கல்வி – 05 மொழி வளர்ச்சி 800 – ஏனைய செலவு – II மாநிலத் திட்டம் – JE தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை – தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பொறுப்பில் உள்ளவை – 09 – உதவி மானியங்கள் – 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான மானியங்கள் "
> (த.தொ.கு. 2202 05 800 JE 0933)

5. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகைக்கான நிதியொதுக்கம் 2006–2007–ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்திய மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும். அத்தகைய நிதி கிடைக்கும் வகையில் அனுமதிக்கப்பட்ட தொகையைப் பெற்று வழங்க தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. மேற்படி தொகைக்கான பட்டியல்கள் சமர்ப்பிக்கப்படும்போது, அவை ஏனைய இனங்களில் சரியாக இருக்கும் நிலையில், அவைகளை அனுமதிக்குமாறு சம்பளக் கணக்கு அலுவலர் ( வடக்கு ), சென்னை – 600 001 கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகைக்கான நிதி ஒதுக்கீட்டை 2006–2007 –ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்திய நிதியொதுக்கத்தில் சேர்க்க தேவையான கருத்துருவினை உரிய நேரத்தில் நிதித் துறைக்கு அனுப்புமாறு தமிழ் வளர்ச்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. மேலே பத்தி 3–ல் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட தொகையை தமிழ் நாடு நிதி விதி தொகுப்பு I-இன் பிரிவுக்கூறு 99–ன் கீழ் முன்பணமாகப் பெறவும், மேற்குறிப்பிட்டுள்ள செலவினங்களை மேற்கொள்ளவும், உரிய பற்றுச் சீட்டுக்களின் அடிப்படையில் முன்பணத்தொகைக்கான பட்டியலை சரிகட்டவும் தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அரசு அனுமதி அளிக்கிறது.

8. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சாரா்பற்ற குறிப்பு எண். 55868/Edn- II/ 2006 நாள் 12.09.2006 – ன் இசைவு மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண். 538– யுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. கற்பூரசுந்தரபாண்டியன்,
சிறப்பு ஆணையர் (ம) அரசு செயலாளர்

பெறுநர்
இயக்குநர்,
தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை–8.
சம்பளக் கணக்கு அலுவலர்(வடக்கு), சென்னை–1.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை–18/35.
நகல்:
முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
நிதி அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர்,சென்னை–9.
நிதி (கல்வி–II/வ.செ.பொ–II)துறை, சென்னை–9.
இருப்புக்கோப்பு / உதிரி

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

13/9/2006
பிரிவு அலுவலர்
13/9/06